# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.88/மா/2022**

**நாள். 26.07.2022**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 30.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.05.2022–ல் பெறப்பட்டு 88/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 30.05.2022 நாளிட்ட தனது மனுவில் :

"நான் கடந்தாண்டு 19.01.2021 தேதியில் இணையதளம் வாயிலாக மதுரை மாவட்ட ஆட்சியர் (GDP) அவர்களுக்கு மதுரை மாநகராட்சி புது விளாங்குடி, பழைய வார்டு 23 – தற்போதைய புதிய வார்டு 1 மற்றும் மண்டலம் 2 (புதிய மண்டலம்) புது விளாக்குடி II பிட் செம்பருத்தி நகர் அய்யப்பன் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான பாதையில் (Path way) சிலர் ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டு, செப்டிக் டேங் அமைத்தும் 40 அடி அகல பாதை 20 அடியாகவும் 20 அடி அகல பாதை 10 அடியாகவும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் போக்குவரத்திற்கு வாகனங்கள் செல்வதற்கு மிகவும் இடையூறு இருப்பதாக புகார் செய்து இருந்தேன். எனது புகாரை மதுரை மாநகராட்சி ஆணையருக்கு நடவடிக்கை எடுக்க

அனுப்பப்பட்டது. ஆனாலும் இன்றுவரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர், மண்டலம் -2, அவர்கள் அய்யப்பன் தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற சிறிதளவும் முயற்சி மேற்கொள்ளவில்லை. எனவே மேற்படி அதிகாரிகள் தன் கடமையை ஒழுங்காக செய்ய தவறியதால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தும் அவர்கள் மீது அபராதம் விதித்தும் நான் சென்னை வந்து வழக்கிற்கு ஆஜராவதற்கு ரூ.3000/- (ரூபாய் மூவாயிரம்) பெற்று தருவதுடன் செம்பருத்தி நகரில் உள்ள "அய்யப்பன்" தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி அத்துமால் காண்பித்து கல் ஊன்றி பின்வரும் காலங்களில் இது போன்ற ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாத்திட உத்தரவிடுமாறு மாண்புமிகு நடுவர் மன்றத்தை வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.07.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.07.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் 12.7.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி, புதுவிளாங்குடி பழைய வார்டு எண்.23, தற்போது புதிய வார்டு எண்.1, மண்டலம்-2, (புதிய மண்டலம்) புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவில், மாநகராட்சிக்கு சொந்தமான பாதை (Path Way) சிலரால் ஆக்கிரமிப்பு செய்து படிக்கட்டு, செப்டிக் டேங்க் அமைத்தும், 40 அடி அகல பாதையை 20 அடியாகவும், 20 அடி பாதை 10 அடியாகவும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூராகவும் இருப்பதை தெரிவித்து மதுரை மாநகராட்சி ஆணையரிடம் புகார் செய்திருந்தேன். மாநகராட்சி அதிகாரிகள் மேற்படி தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், பின்வரும் காலங்களில் இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டல உதவிப் பொறியாளர் 12.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, புதுவிளாங்குடி பழைய வார்டு எண்.23, தற்போது புதிய வார்டு எண்.1, மண்டலம்-2 (புதிய மண்டலம்) புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவில் நேரடியாக பார்வையிட்டு அங்கு ஏதேனும் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை உடனே அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த புகைப்படங்கள், மதுரை மாநகராட்சி, மண்டலம் -02ஐச் சேர்ந்த உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- மனுதாரர் தான் வசிக்கும் புது விளாங்குடி, அய்யப்பன் தெருவில் படிக்கட்டு, செப்டிக் டேங்க் அமைத்து மாநகராட்சி பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதன் காரணமாக பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளதாகத் தெரிவித்து, மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

- மனுதாரரால் 19.01.2021 அன்று இணையவழி கோரிக்கை மனுவாக அனுப்பப்பட்டு, 12.02.2021 மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது மேற்கண்ட ஆக்கிரமிப்பு தொடர்பான சம்பந்தப்பட்ட வார்டு பொறியாளர்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பு கிடைக்கப்பெற்றவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனுதாரருக்கு இணையவழி வாயிலாக தெரிவிக்கப்பட்டதை அறிய முடிகிறது.

- மனுதாரரால் புகார் அனுப்பப்பட்டு சுமார் 1½ வருட காலமாகியும், மனுதாரருக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பதில் அனுப்பிவிட்டு, கடந்த 1½ வருடத்திற்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்படாததால், மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

6. மதுரை மாநகராட்சி வடக்கு மண்டல உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, புதுவிளாங்குடி பழைய வார்டு எண்.23, தற்போது புதிய வார்டு எண்.1, மண்டலம் -2 (புதிய மண்டலம்) புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவில் நேரடியாக பார்வையிட்டு அங்கு ஏதேனும் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை உடனே அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததில் இருந்தே மனுதாரரால் அளிக்கப்பட்ட புகார் குறித்து புகாரின் தன்மை குறித்தும், மேற்படி இடத்தினை இதுவரை ஆய்வு செய்ய எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதும் தெளிவாகிறது.

7. மேலும் இத்தகைய புகார்களின் உண்மைத்தன்மையை ஆராயாமல் அதனை கண்டுகொள்ளாமல் மதுரை மாநகராட்சி உயர் அலுவலர்கள் அலட்சியமாக இருந்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

8. மாநகராட்சி அனுமதி இல்லாமல் கட்டப்படும் கட்டமைப்புகள், செப்டிக்டேங்க் ஆகியன குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள Madurai City Municipal Corporation Act, 1971 பிரிவு 213ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Building. etc., not to be erected without permission, over drains–

1. Without the permission of the Commissioner, no person shall place or construct any fence, building, culvert, pipe, drain, drain-covering or other structure or any street, railway or cable over, under, in or across any public drain or stop up, divert, obstruct or in any way interfere with a public drain, whether it passes through public or private ground.

2. The Commissioner may remove or otherwise deal with anything placed or constructed in contravention of sub-section(1) as he shall think fit, and the cost of so doing shall be recoverable from the owner thereof in the manner provided in section 479.

**9.** எனவே மேற்சொன்ன சட்டப்பிரிவின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களின் நடவடிக்கை கண்டனத்துக்குரியதாகும். எனவே சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்கள் மற்றும் கள அலுவலர்கள் மீது நடைமுறையில் உள்ள சட்டப்பிரிவுகளின்படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு கடுமையான தண்டனைகளை வழங்கிட பரிந்துரைத்து மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டல உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி புதுவிளாங்குடி பழைய வார்டு எண்.23, தற்போது புதிய வார்டு எண்.1, மண்டலம் 02 (புதிய மண்டலம்) புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெருவினை நேரடியாக பார்வையிட்டு அங்கு ஏதேனும் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை உடனே அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளவாறு, உதவி பொறியாளரே நேரடியாக கள ஆய்வு செய்திடவும், அங்கு மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அதனை உடனே அகற்றிடவும், மேலும் தொடர்ந்து ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாத்திடவும் உரிய விதிகளுக்குட்பட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்திடவும் மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Zonal Officials of Zone 2 have not done anything in the matter for more than 19 months since the online complaint was lodged with the District Collector and Corporation of Madurai regarding the encroachment. This is viewed with serious displeasure by the Forum. Encroachment on the pathway belonging to the Corporation by way of construction of septic tank, steps to houses etc. can not be taken leniently. The field officials even after receipt of the complaint from the Forum did not think it fit that action should be initiated for eviction after inspection. They have defaulted in the redressal of the grievance on behalf of the local residents. This shows their failure of devotion to duty, collusion with the encroachers, sheer, lethargy, criminal inaction intent on creating a negative impulse in the minds of the local residents as to the image of the Corporation as well as that of Local

Administration of the State Government . This kind of disloyalty to one's office and duties is condemned strongly. The encroachments on the pathway should be evicted within a month's time and compliance reported to this Forum. Disciplinary action against all the delinquent officials of the zone responsible for this state of affairs should be launched by the Corporation Commissioner forthwith and substantial punishments to be awarded for their willful and wanton failure to redress the complaint lodged in January, 2021.

2022-ஆம் ஆண்டு ஜூலை திங்கள்26-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.

2. ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3. உதவி ஆணையர்,
மண்டலம் - 02,
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம்.

4. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.